**சிறப்பு நீதிமன்றம் எண்.2 (LAOP), ஜெயங்கொண்டம்.**
**முன்னிலை: திரு.வ.பிரேம்குமார்., B.A., B.L.,**
**சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP),**
**ஜெயங்கொண்டம்.**
**2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 30 ம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண்.38/2020**
**(C.N.R.No. TNAL 06-000075-2020)**
**(ஜெயங்கொண்டம், சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.181/2018)**

சிவசங்கரி ... வாதி

...எதிர்...

1.செல்வராணி
2. மைனர் ஷாஷினி
அவருக்கு காப்பாளராக அவரது
தாயார் 1ம் பிரதிவாதி
செல்வராணி
3. மலர்கொடி
4. சின்னதுரை
5. ராஜேந்திரன் ... பிரதிவாதிகள்

இந்த அசல் வழக்கானது முதன் முதலில் ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.181/2018 ஆக கடந்த 03.11.2018 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் A.No.142/2019, நாள் 06.02.2019-இன் உத்தரவுபடி ஜெயங்கொண்டம் சிறப்பு நீதிமன்றம் எண்.2-ற்கு இந்த வழக்கு

மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.38/2020 ஆக கடந்த 02.01.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து வந்து இறுதியாக 27.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.வெங்கடேசன் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.R.S.சந்திரமோகன் அவர்கள் முன்னிலையாகியும், 3,4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பினர் வாதங்கள் கேட்கப்பட்டு, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 3ல் 1 பங்கு பாக உரிமையை விளம்புகை செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், அதனை அனுசரித்து இந்நீதிமன்ற வழக்கறிஞர் மூலம் நலஇளப்பம் சரிகட்டி வாதியின் பாகத்தை பிரித்து தனி சுவாதீனம் பெற ஏதுவாக இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், தாவா சொத்துக்கள் பொறுத்து வழக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் யாருக்கும் எந்தவித ஆவணமோ, பாராதீனமோ ஏற்படுத்தாமல் இருக்க நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம்

வழங்க கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வழக்குரையின் சுருக்கம்:-</u>

(i) தாவா சொத்துகள் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்துகள் ஆகும். தாவா சொத்துகளில் இந்து வாரிசுரிமை சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டப்படி வாதிக்கு 1/3 பாகமும், 1,2 பிரதிவாதிகளுக்கு 1/3 பாகமும், 3-ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும் சித்தித்து உள்ளது. தாவா 1 முதல் 8 அயிட்டச் சொத்துகளும், இன்னும் பல சொத்துகளும் ஆதியில் வாதியின் தகப்பனார் வழி பாட்டனார் கோவிந்தராசு என்பவருக்கு பூர்வீகப்பாத்தியமான சொத்துகள் ஆகும். கோவிந்தராசு மனைவி அஞ்சலை. மேற்படியார்களுக்கு 1) கலியபெருமாள், 2) சின்னதுரை, 3) இந்திராணி, 4) ராஜேந்திரன் 5) தமிழரசி ஆகியோர்கள் வாரிசுகளாவார்கள். இதில் வாதியின் பாட்டனார் கோவிந்தராசு உயிருடன் இருந்த காலத்திலேயே பெண் மக்களை நல்லமுறையில் சகல சீர்வரிசைகளுடன் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு, நல்லமுறையில் வாழ்ந்து வருகின்றார்கள். கோவிந்தராசு மற்றும் ஆண் மக்களான 1) கலியபெருமாள், 2) சின்னதுரை, 3) ராஜேந்திரன் ஆகியோர்களுக்குள்

வாய்மொழியாக சென்ற 1990ம் ஆண்டு சித்திரை மாதம் பொது குடும்பச்சொத்துகள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது. அவ்வாறு வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டதில் கலியபெருமாள் பாகத்திற்கு தாவா 1 முதல்8 சொத்துகள் ஒதுக்கப்பட்டது. அவ்வாறு பொது குடும்பச் சொத்துகள் மூலம் கிடைத்த வருவாய் கொண்டு கலியபெருமாள் உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா சொத்துகளில் பல சொத்துகள் கலியபெருமாள் மூலம் பதிவான கிரையங்கள் மூலம் அவர் பேரிலும், அவருடைய மக்கள் பேரிலும் கிரையம் பெறப்பட்டுள்ளது. அவைகளும் பொது குடும்பச் சொத்துகளாகவே பாகிக்கப்பட வேண்டியதாக உள்ளது. இந்தநிலையில் கலியபெருமாள் சென்ற 31.03.2000 ல் இறந்துவிட்டார். இறந்த கலியபெருமாள் மனைவி மலர்கொடி. மேற்படியார்களுக்கு 1) கார்த்திகேயன், 2) சிவசங்கரி ஆகியோர்கள் வாரிசுகள். குடும்பச் சொத்துகள் பொறுத்து இறந்த கலியபெருமாள் யாருக்கும் எந்தவித ஆவணமும் எழுதி வைக்காமல் எந்தவித முன்னேற்பாடுமின்றி இறந்துவிட்டார். அந்தவகையில் இறந்த கலியபெருமாளுக்கு வாதி, இறந்த கார்த்திகேயன் மற்றும் 3-ம் பிரதிவாதி மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். வேறு வாரிசுகள் இல்லை.

(ii) கலியபெருமாள் இறந்த பின்னர், கலியபெருமாள் குடும்பத்தினர்களுக்கும், கலியபெருமாள் உடன்பிறந்தவர்களுக்குள்ளும் சில பிரச்சனைகள் ஏற்பட்டது. அதனால் இறந்த கலியபெருமாள் குமாரர் கார்த்திகேயன் மற்றும் கோவிந்தராசுவின் மக்களான சின்னதுரை மற்றும் ராஜேந்திரன் இடையே சென்ற 29.03.2007-இல் பதிவான பாகப்பத்திரம் ஏற்பட்டது. கலியபெருமாள் உயிருடன் இருந்த காலத்தில் வாய்மொழி பாகமாக ஒதுக்கப்பட்ட அதே சொத்துகள் பொறுத்து பதிவான பாகப்பத்திரம் ஏற்பட்டது. மேற்படி பதிவான பாகப்பத்திரத்தில் கலியபெருமாளுக்கு ஒதுக்கப்பட்ட பாகச் சொத்துகள் அவர் மகனான கார்த்திகேயனுக்கு "பி" ஷெட்யூலாக ஒதுக்கப்பட்டது. அந்தவகையில் பாகச்சொத்துகள் மற்றும் கிரையச்சொத்துகளுக்கு கலியபெருமாள், அவர் மனைவி மற்றும் மகன் பேரில் பட்டா பெறப்பட்டு, தீர்வை செலுத்தப்பட்டு, ரெவின்யூ ரெக்கார்டுகளுடன் அனுபோகம் செய்யப்பட்டு வரப்படுகின்றது. தாவா சொத்துகள் வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் அடங்கிய பொது குடும்பச் சொத்துகள் ஆகும். திருத்தப்பட்ட சட்டப்படி வாதி "கோ-பார்சனர்" ஆவார். தாவா சொத்துகளில் அவருக்கு சட்டப்படி பாக உரிமை உண்டு. கோவிந்தராசு மற்றும் அஞ்சலை இறந்துவிட்டார்கள்.

(iii) இந்தநிலையில் கலியபெருமாள் குமாரர் கார்த்திகேயன் சென்ற 07.08.2017-இல் இறந்துவிட்டார். கார்த்திகேயன் மனைவி செல்வராணி. ஒரே மகள் ஷாஷினி. கார்த்திகேயன் உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா 15-வது அயிட்டச் சொத்து 3-ம் பிரதிவாதியால் பொது குடும்பச்சொத்துகள் மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் கொண்டு மருமகளான 1-ம் பிரதிவாதி பேரில் சென்ற 09.10.2009-இல் பதிவான கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெறப்பட்டுள்ளது. அதுவும் பொது குடும்பச் சொத்துகளாகவே கருதப்பட வேண்டியதாக உள்ளது. கலியபெருமாள் குடும்பத்தில் நாளதுவரையில் எந்தவித பாகமும் ஏற்படவில்லை. தாவா சொத்துகளும் நாளதுவரையில் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் "கூட்டு சுவாதீன" அனுபோகத்திலேயே இருந்து வருகின்றது. உடன்காலத்தில் வாதி, வழக்கு 1,3 பிரதிவாதிகளை சந்தித்து தாவா சொத்துகளில் "இந்து வாரிசுரிமை சட்டப்படி" வாதிக்குண்டான 1/3 பாகத்தினைப் பொறுத்து பிரித்து பாகப்பத்திரம் எழுதி, பதிவு செய்து தரும்படி சென்ற 10.09.2018-இல் கேட்டதற்கு, வழக்கு 1முதல் 3 பிரதிவாதிகள் சென்ற 30.09.2018-இல் மறுத்துவிட்டார்கள். அந்தவகையில் வாதி சட்டப்படி அவருக்குண்டான பாகத்தினை கேட்டு இந்த பாக வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வழக்கு 4,5 பிரதிவாதிகள் கலியபெருமாள் உடன்பிறந்தவர்கள் அவர்களுக்கு

தாவா சொத்துக்கள் பொறுத்து கலியபெருமாள் இருந்த காலத்தில் வாய்மொழி பாகமும், அவர் காலத்திற்கு பின்னிட்டு பதிவான பாகப்பத்திரமும் ஏற்பட்டது நன்கு தெரியும் என்பதால் பின்னிட்ட வீண் விவகாரம் தவிர்த்திடும் வகைக்கு வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

(i) வாதியின் தந்தை 31.03.2000 அன்றே இறந்து விட்டார் என்பதால் Hindu Succession Amendment Act 39/2005 Coparcenar என்று உரிமை கொண்டாட முடியாது. தாவா 1 முதல் 8 அயிட்ட சொத்துக்கள் மட்டுமே பூர்வீக சொத்துக்கள் ஆகும். அதில் வாதிக்குரியது 6ல் 1 மட்டுமேயாகும். வாதியின் தந்தை கலியபெருமாள் காவல்துறையில் காவலராக பணிபுரிந்து காலமானார். அவர் உயிருடனிருந்த காலத்தில் தனக்கு சம்பளம் மூலம் கிடைத்த சொந்த வருமானத்திலிருந்து 17.05.1995ல் திருக்களப்பூர் கிராம எல்லையில் சர்வே எண் 331-7ல் ஏக். 0.24 மற்றும் சர்வே எண் 331-9ல் ஏக்.1.21 ஆகக் கூடுதல் ஏக். 1.45 நிலத்தை 1ம் பிரதிவாதியின் கணவரான அப்போது மைனராக இருந்த கார்த்திகேயனுக்காக கிரயம் வாங்கி இருந்தார். அதனை கார்த்திகேயன் தனது தங்கையான வாதியின் திருமணத்திற்காக

நெட்டிலக்குறிச்சி கிராமத்தை சேர்ந்த அழகர்சாமி மகன் பாலசந்திரனிடம் கிரயம் கொடுத்து அக்கிரயத் தொகையை கொண்டு சீர்வரிசைகளுடன் செலவு செய்து 2010ம் ஆண்டு திருமணம் செய்து கொடுத்துள்ளார். அதனால் வாதி மேற்படி பூர்வீக சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை விட்டுக்கொடுத்துவிட்டார். தற்சமயம் 7.8.2017 அன்று கார்த்திகேயன் காலமாகிவிட்டதால் பேராசையுடன் மன சாட்சிக்கு விரோதமாக வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். அதற்கு வாதியின் தாயாரான 3வது பிரதிவாதியும் உடந்தையாக உள்ளார். வாதி தனது பாக உரிமையை விட்டுக்கொடுத்து விட்டதால் தான் தனக்காக விற்பனை செய்யப்பட்ட மேற்படி ஏக்.1.45 நிலத்தை தனது வழக்குரையில் சேர்க்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(ii) தாவா 9வது 10வது அயிட்ட நிலங்கள் 08.08.1996 அன்று மைனராக இருந்த 1ம் பிரதிவாதியின் கணவரான கார்த்திகேயனுக்காக இறந்த கலியபெருமாள் தனது சொந்த வருமானத்திலிருந்து கிரயம் பெற்றதாகும். தாவா 11வது அயிட்டமும் 3.2.1996 அன்று மைனர் கார்த்திகேயனுக்காக அவரது தந்தை கலியபெருமாள் காவல்துறையில் காவலராக பணிபுரிந்து சம்பாதித்த தனது தனிப்பட்ட வருமானம் மூலம் கிரயம்

பெறப்பட்ட சொத்தாகும். தாவா 13 வது அயிட்ட நிலமும் கலியபெருமாள் தனது தனிப்பட்ட வருமானத்திலிருந்து கிரயம் பெறப்பட்டதாகும். 1 முதல் 8 அயிட்ட பூர்வீக சொத்துக்கள் மானாவாரி புன்செய் நிலமானதால் அவற்றிலிருந்து உபரி வருமானம் ஏதும் வந்ததில்லை. எனவே மேற்படி கலியபெருமாள் கிரயம் பெற்றுள்ள நிலங்கள் அவருக்கும் அவரது மகனான கார்த்திகேயனுக்கும் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்களாகும். பூர்வீக சொத்துக்கள் மூலம் கிடைத்த வருவாயை கொண்டு வாங்கப்பட்டவை என்று வாதி கூறுவது உண்மையல்ல.

(iii) கலியபெருமாள் இறந்த பிறகு அவரது மகனான கார்த்திகேயன் காவல்துறையில் பணி நியமனம் செய்யப்பட்டு காவலராக பணிபுரிந்து வந்தார். 12 வது மற்றும் 14 வது அயிட்ட சொத்துக்களை தான் தனித்து வேலை செய்து சம்பாதித்த தனிப்பட்ட வருமானத்திலிருந்து கிரயம் பெற்றுள்ளார். தாவா 15 வது அயிட்ட சொத்து முதல் பிரதிவாதியால் தனது சேமிப்பு மற்றும் திருமணத்தின் போது 'பெற்றோரால் அளிக்கப்பட்ட சீதனப் பொருட்கள் மற்றும் ரொக்கம் மூலம் கிரயம் பெறப்பட்ட அவரது தனிப்பட்ட சொத்தாகும். எனவே 9 முதல் 15 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வாதியின் வழக்கு தாவா எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.வாதியின்

தாவா மதிப்பீடு சரியல்ல. அவர் தாவா சொத்துக்களின் கூட்டு சுவாதீனத்தில் இல்லை. விலக்கப்பட்டு விட்டார் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) <u>வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள (Reply Statement)-ன் சுருக்கம்:-</u>

(i) வாதியின் சகோதரர் கார்த்திகேயன் இறந்த பிறகு குடும்பத்தில் கஷ்டம் ஏற்பட்டது. அதன் காரணமாகவே வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் கூடி, 4-ம் பிரதிவாதியிடம் கடனாக ரொக்கம் 1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம்) பெற்றிருந்தார்கள். அதன் காரணமாக சென்ற 10.01.2018-இல் ஆண்டிமடம் தாலுக்கா, திருக்களப்பூர் கிராமத்தில் இருந்த 1)அ.பு.ரீ.சர்வே.331/9B 0.32.5 ஏர்ஸ், 2)அ.பு.ரீ.சர்வே.331/9C 0.19.5 ஏர்ஸ் மற்றும் 3)அ.பு.ரீ.சர்வே.331/7 0.15.5 ஏர்ஸ் சொத்துகளை வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஒன்று கூடிக்கொண்டு, 4-ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள். அதன்பின்னர், வாதி இந்த பாக வழக்கினை தாக்கல் செய்தபொழுது 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்துகளை விட்டுவிட்டு, மற்ற பொது குடும்பச்சொத்துகள் பொறுத்தே வழக்கு தாக்கல் செய்தார். ஆனால், வழக்கு 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த

ஸ்டேட்மெண்ட்டில் கிரையம் கொடுக்கப்பட்டுள்ள சொத்துகளை சேர்க்கவில்லை என்பதால், வழக்கு "Partial Partition" என கூறப்பட்டு இருந்தது. மேற்படி சொத்துகளை வழக்கில் "பி" ஷெட்யூல் சொத்துகளாக சேர்க்கக்கேட்டு வாதியால் சி.பி.சி. ஆர்டர் 6 ரூல் 17 மற்றும் 18-ன் படி திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி திருத்தல் மனு ஐ.ஏ.2/2020 இன் ஓ.எஸ்.38/2020 என்ற எண்ணில் கோப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, சென்ற 23.02.2021-இல் நீதிமன்றத்தில் உத்தரவு பகரப்பட்டது. மேற்படி உத்தரவில், "கூட்டுக்குடும்ப சொத்துகளின் ஒரு பகுதியை குடும்ப உறுப்பினர்களே மனம் ஒத்து விற்பனை செய்துவிட்ட பிறகு, அந்த சொத்துகளை தாவாவில் சேர்த்து வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதினால் மனுதாரர்கள் திருத்தல் மனுவில் கூறியுள்ள "பி" அட்டவணை சொத்துகளை தாவாவில் சேர்த்து திருந்தப்பாடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள் என்று வாதியால் இந்த Reply Statement தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5) <u>3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள (Reply Statement)-ன் சுருக்கம்:-</u>**

வாதி கேட்டுள்ள பரிகாரம் தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் பொறுத்து தீர்ப்பு செய்வதில் இந்த பிரதிவாதிக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இந்த பிரதிவாதிக்கும் தாவா சொத்துக்களில் அவருக்குண்டான 1/3 பாகத்தினைப் பொருத்தும் சேர்த்து தாவாப்படி தீர்ப்பாக கேட்டுள்ளார். வாதியின் பிராது கோரிக்கையை இந்த பிரதிவாதி ஏற்றுக்கொள்கின்றார். அந்தவகையில் வழக்கு வாதி அவருடைய 1/3 பாகத்தினை பொருத்து செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.5,000/- ஆகும். ஆகையால் இந்நீதிமன்றத்தார் அவர்கள் தயவுசெய்து வழக்கு 3ம் பிரதிவாதியால் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றச் கட்டணத்தினை ஏற்று தாவாப்படி தீர்ப்பு செய்தும், இந்த பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் சித்தித்திருக்கும் 1/4 பாகத்தினைப் பொருத்து தீர்ப்பு செய்து உத்தரவாக இந்த 3ம் பிரதிவாதி பிராத்திக்கின்றார்.

**6) <u>4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள (Reply Statement)-ன் சுருக்கம்:-</u>**

வாதியின் வழக்கு சரியானது. வாதிக்கு தாவாப்படி தீர்ப்பு செய்வதில் இந்த பிரதிவாதிக்கு எந்தவித ஆட்சேபனையும்

கிடையாது. கடந்த 16.05.2019 ல் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மூலம் இந்த பிரதிவாதி ஆண்டிமடம் தாலுக்கா, திருக்களப்பூர் கிராமத்தில் 1) சர்வே எண்.331/3B 0.32.5 ஏர்ஸ, 2) சர்வே எண்.331/9C 0.19.5 ஏர்ஸ் மற்றும் 3) சர்வே எண்.331/7 0.15.5 ஏர்ஸ் என 3 அயிட்டச் சொத்துக்களை அதன் சரியான பிரதிபிரயோஜனத்துடன் கூடிய தொகை ரூ.1,34,000/- க்கு பதிவான கிரையபத்திரம் மூலம் கிரையம் பெற்று சொத்து சுவாதீனமும் பெற்றுக்கொண்டுவிட்டார். வாய்மொழி கிரையம் பெற்ற காலம் முதலே மேற்படி சொத்துக்கள் இந்த பிரதிவாதியின் அனுபோகத்தில் இருந்து வருகின்றது. இந்த வழக்கில் இந்த பிரதிவாதியால் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளால் மூலம் பெறப்பட்ட மேலேகண்ட 3 அயிட்டச்சொத்துக்களைப் பொருத்து அக்ரம லாபம் அடைந்திட எண்ணி வழக்கில் சேர்க்கும் பட்சத்தில் இந்த பிரதிவாதியால் பதிவான கிரையம் மூலம் சென்ற 16.05.2019 ல் பெறப்பட்ட மேற்படி 3 அயிட்டச்சொத்துக்கள் பொருத்து Equity மூலம் இந்த பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டியதாக உள்ளது. அவைகளில் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எந்தவித பாகமும் கிடைக்க வேண்டியதில்லை என்று 4ம் பிரதிவாதி பிராத்திக்கின்றார்.

7) இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில், இவ்வழக்கில் கடந்த 01.04.2019 ம் தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff has released his right of share over the suit properties? |
| 2. | Whether the suit is bad for partial partition as alleged by the 1,2 defendants? |
| 3. | Whether the plaintiff is not entitled for partition in respect of 9 to 15 items of suit properties as alleged by the defendants 1,2? |
| 4. | Whether the plaintiff is entitled for preliminary decree of 1/3 shares in the suit properties as prayed for? |
| 5. | To what other relief the plaintiff is entitled for? |

8) இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில், இவ்வழக்கில் கடந்த 02.11.2021 ம் தேதி வனையப்பட்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. | Whether the properties disclosed in the written statement of D1, D2 other that suit properties sold by the plaintiffs and defendants no.1 to 3 before the instituting of the suit as alleged by the plaintiff is correct? |

**9)** வாதியின் வழக்குரை சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில், வாதி சிவசங்கரி **வா.சா.1** ஆகவும், ஜோதி என்பவர் **வா.சா.2** ஆகவும் விசாரிக்கப்பட்டு, **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.24** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1, 2 பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி செல்வராணி **பி.வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு, வாதியின் குறுக்கு விசாரணை மூலம் **பி.வா.சா.ஆ.1** குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதி மலர்கொடி **பி.வா.சா.2** ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

10) <u>வழக்கெழு வினா 1- க்கான தீர்வு:-</u>

(i) வாதி, **3**ம் பிரதிவாதியின் மகள் ஆவார். **1** மற்றும் **2** பிரதிவாதிகள், வாதியின் சகோதரர் கார்த்திகேயனின் மனைவி மற்றும் மகள் ஆவார்கள். **4,5** பிரதிவாதிகள் வாதியின் தந்தை கலியபெருமாளின் உடன்பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். கோவிந்தராசு – அஞ்சலை தம்பதியருக்கு வாதியின் தந்தை **1)** கலியபெருமாள் **2) 4**ம் பிரதிவாதி சின்னதுரை **3) 5**ம் பிரதிவாதி ராஜேந்திரன் மற்றும் **4)** இந்திராணி, **5)** தமிழரசி ஆகியோர் வாரிசுகளாவார்கள். மேற்படி கலியபெருமாள் மற்றும் அவருடைய சகோதர, சகோதரிக்குள் வாய்மொழி பாகம் ஏற்பட்டுள்ளது. வாதியின் தந்தை இறந்த பிறகு வாதியின் தாத்தா கோவிந்தராசு, வாதியின் சகோதரர் கார்த்திகேயன் மற்றும் **4,5**

பிரதிவாதிகளுக்கிடையே கடந்த 29.03.2007 ல் பாகம் ஏற்பட்டுள்ளது. மேற்படி பாகப்பரிவினை பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பரிவினையில் தாவா 1 முதல் 8 அயிட்ட சொத்துக்கள் வாதியின் சகோதரரும், 1ம் பிரதிவாதியின் கணவருமான கார்த்திகேயனுக்கு ஒதுக்கபட்டுள்ளது.

(ii) 9 மற்றும் 10 வது இன சொத்துக்களை 08.08.1996 அன்று வாதியின் தந்தை கலியபெருமாள் அவருடைய மனைவி மலர்கொடியை கார்டியனாக காண்பித்து 1ம் பிரதிவாதியின் கணவர் மைனர் கார்த்திகேயன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 11 வது இன சொத்து 03.02.1999 அன்று வாதியின் தந்தை கலியபெருமாள் அவருடைய மனைவி மலர்கொடியை கார்டியனாக காண்பித்து 1ம் பிரதிவாதியின் கணவர் மைனர் கார்த்திகேயன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 13 வது இன சொத்து 28.09.1998 அன்று வாதியின் தந்தை கலியபெருமாள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 12 வது இன சொத்து 23.04.2008 அன்று 1ம் பிரதிவாதியின் கணவர்

கார்த்திகேயன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) 14 வது இன சொத்து கடந்த 12.06.2003 அன்று 1ம் பிரதிவாதியின் கணவர் கார்த்திகேயன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 15 வது இன சொத்து கடந்த 09.10.2009 அன்று 1ம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா 15 வது அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. இதர 1 முதல் 14 அயிட்ட சொத்துக்கள் வாதியின் தந்தை கலியபெருமாள் மற்றும் வாதியின் சகோதரர் கார்த்திகேயன் ஆகியோர் பெயரில் உள்ளது. வாதியின் தந்தை கலியபெருமாள் கடந்த 31.03.2000 அன்று இறந்துவிட்டார். அவருடைய இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.19 ஆகவும், அவருடைய வாரிசு சான்று நகல் வா.சா.ஆ.20 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி வாதியின் தந்தை கலியபெருமாளுக்கு 3ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் கணவர் கார்த்திகேயன் மற்றும் வாதி ஆகியோர்கள் வாரிசுகளாவார்கள். 1ம் பிரதிவாதியின் கணவரும் வாதியின் சகோதரருமான கார்த்திகேயன் கடந்த 07.08.2017 அன்று காலமாகியுள்ளார்.

அவருடைய இறப்பு சான்று நகல் வா.சா.ஆ.**21** ஆகவும், அவருடைய வாரிசு சான்று நகல் வா.சா.ஆ.**22** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) **1**ம் பிரதிவாதியின தரப்பில், வாதியின் தந்தை கலியபெருமாள் காவல்துறையில் பணிபுரிந்த காலத்தில் அவருடைய சொந்த வருமானத்திலிருந்து 17.05.1995ல் திருக்களப்பூர் கிராம எல்லையில் சர்வே எண் 331-7ல் ஏக். 0.24 மற்றும் சர்வே எண் 331-9ல் ஏக்.1.21 ஆகக் கூடுதல் ஏக். 1.45 நிலத்தை 1ம் பிரதிவாதியின் கணவரான அப்போது மைனராக இருந்த கார்த்திகேயனுக்காக கிரயம் வாங்கி இருந்தார் என்றும், அந்த சொத்துக்களை கார்த்திகேயன் தனது தங்கையான வாதியின் திருமணத்திற்காக நெட்டிலக்குறிச்சி கிராமத்தை சேர்ந்த அழகர்சாமி மகன் பாலசந்திரனிடம் கிரயம் கொடுத்து அக்கிரயத் தொகையை கொண்டு சீர்வரிசைகளுடன் செலவு செய்து 2010ம் ஆண்டு வாதியை திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதனால் வாதி மேற்படி பூர்வீக சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை விட்டுக்கொடுத்துவிட்டார் என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் வாதி எழுத்துமூலமாக விடுதலை பத்திரம் எதுவும் 1ம் பிரதிவாதியின் கணவருக்கு எழுதிக்கொடுக்கவில்லை. எனவே தாவா சொத்துக்களை பொருத்து பாக உரிமையை வாதி

விட்டுக்கொடுத்துவிட்டார் என்ற 1ம் பிரதிவாதியின் எதிர்வாதம் நிராகரிக்கப்படுகிறது. அவ்வாறே **வழக்கெழுவினா 1- ற்கு** தீர்வு காணப்படுகிறது.

**11) வழக்கெழுவினா 2 மற்றும் கூடுதல் வழக்கெழுவினா 1 க்கான தீர்வு:-**

1ம் பிரதிவாதி தரப்பில், 1ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் கிரையம் வாங்கி வாதியின் திருமண செலவுக்காக கிரையம் செய்து கொடுக்கப்பட்ட திருக்களப்பூர் கிராம எல்லையில் சர்வே எண் 331-7ல் ஏக். 0.24 மற்றும் சர்வே எண் 331-9ல் ஏக்.1.21 ஆகக் கூடுதல் ஏக். 1.45 நிலத்தை வாதி இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினை (Partial Partition) என்ற குறைபாட்டால் பாதிக்கபட்டுள்ளது என்றும், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்தானது வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளால் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களானது வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளால் கூட்டாக கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதால் அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. எனவே இந்த வழக்கானது பகுதி பாகப்பிரிவினை (Partial Partition) என்ற குறைபாட்டால்

பாதிக்கபட்டுள்ளது என்ற 1ம் பிரதிவாதியின் எதிர்வாதம் நிராகரிக்கப்படுகிறது. அவ்வாறே **வழக்கெழு வினா 2 மற்றும் கூடுதல் வழக்கெழுவினா 1 க்கு** தீர்வு காணப்படுகிறது.

**12) வழக்கெழுவினாக்கள் 3 மற்றும் 4 க்கான தீர்வு:-**

(i) தாவா 15 வது அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. இதர 1 முதல் 14 அயிட்ட சொத்துக்கள் வாதியின் தந்தை கலியபெருமாள் மற்றும் வாதியின் சகோதரர் கார்த்திகேயன் ஆகியோர் பெயரில் உள்ளது. வழக்கு நிலுவையில் இருந்தபோது வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குள் சமரசம் ஏற்பட்டு சமாதான உடன்படிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதியான பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில் ***நானும், வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் அனைவரும் ஊரில் சமாதானம் பேசி சமரசம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தாவா 1 வது அயிட்ட சொத்தில் 15 சென்ட், மேல்புறம் 7 1/2 சென்ட் எனக்கு ஒதுக்கினால் போதும் என்றும், இதர சொத்துக்களை வாதி 1ம் பிரதிவாதியின் சமமாக எடுத்துக்கொள்ள சம்மதம்*** என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி 3ம் பிரதிவாதியின் மகளான வாதியும், அதற்கு ஒப்புக்கொண்டு அந்த சாட்சியத்தில் கையொப்பம் செய்துள்ளார்.

(ii) எனவே வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் தாவா சொத்துக்களை பாகம் பிரித்துக்கொடுப்பதில் இந்த நீதிமன்றத்திற்கு எந்தவித தடையும் இல்லை. எனவே தாவா சொத்தில் 1 வது இன சொத்தில் மேல்புறம் 7 1/2 சென்ட் 3ம் பிரதிவாதிக்கும், கீழ்புறம் 7 1/2 சென்ட் 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதர 2 முதல் 15 அயிட்ட சொத்துக்களில் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் தலா 1/2 பாகம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அவ்வாறே **வழக்கெழு வினாக்கள் 3 மற்றும் 4 க்கு** தீர்வு காணப்படுகிறது.

13) **வழக்கெழுவினா 5 க்கான தீர்வு:-**

இந்த வழக்கில் வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை. தரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு இவ்வழக்கின் செலவுத்தொகையை தரப்பினர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறே **வழக்கெழுவினா 5-ற்கு** தீர்வு காணப்படுகிறது.

14) முடிவாக

| | |
|---|---|
| 1. | **அசல் வழக்கு எண். 38/2020 அனுமதிக்கப்படுகிறது.** |
| 2. | **தாவா சொத்துக்களில் 1 வது இன சொத்தில் 1ம் பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் தலா 1/2 பாக உரிமையை விளம்புகை செய்தும், இதர சொத்துக்களில் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும்** |

| | |
|---|---|
| | **தலா 1/2 பாக உரிமையை விளம்புகை செய்தும் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** **அதனடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு செய்துகொள்ள வாதிக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.** |
| **3.** | **வழக்கின் செலவுத்தொகையை தரப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.** |

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

PREMKUMAR
Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.07.30 16:31:40 +1000

சிறப்பு நீதிபதி எண்-2 (LAOP)
ஜெயங்கொண்டம்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u> –**

வா.சா.1 – சிவசங்கரி (வாதி)
வா.சா.2 – ஜோதி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u> –**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.03.2007 | வாதி குடும்பத்தில் ஏற்பட்ட பாகபத்திரத்தின் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 08.08.1996 | தாவா 9,10 அயிட்ட சொத்துக்களுக்கான கிரையபத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.3 | 03.02.1999 | தாவா 11 வது அயிட்ட சொத்துக்கான கிரையபத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.4 | 23.04.2008 | தாவா 12 வது அயிட்ட சொத்துக்கான கிரையபத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.5 | 28.09.1998 | தாவா 13 வது அயிட்ட சொத்துக்கான கிரையபத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.6 | 12.06.2003 | தாவா 14 வது அயிட்ட சொத்துக்கான கிரையபத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.7 | 09.10.2009 | தாவா 15 வது அயிட்ட சொத்துக்கான கிரையபத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.8 | 28.10.2018 | தாவா 1 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.9 | 23.10.2018 | தாவா 2,7 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.10 | 23.10.2018 | தாவா 3 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.11 | 23.10.2018 | தாவா 4 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.12 | 23.10.2018 | தாவா 5 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.13 | 23.10.2018 | தாவா 6,12 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.14 | 23.10.2018 | தாவா 8 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.15 | 23.10.2018 | தாவா 9,10,11 வது அயிட்ட சொத்திற்கான |

| | | |
|---|---|---|
| | | கணினி பட்டா |
| வா.சா.ஆ.16 | 23.10.2018 | தாவா 13 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.17 | 25.10.2018 | தாவா 14 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.18 | 31.10.2018 | தாவா 15 வது அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.19 | 17.04.2000 | வாதியின் தந்தை கலியபெருமாளின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.20 | 15.05.2000 | வாதியின் தந்தை கலியபெருமாளின் வாரிசு சான்றிதழின் நகல் |
| வா.சா.ஆ.21 | 24.08.2017 | வாதியின் சகோதரர் கார்த்திகேயனின் இறப்பு சான்றிதழின் நகல் |
| வா.சா.ஆ.22 | 17.10.2017 | வாதியின் சகோதரர் கார்த்திகேயனின் வாரிசு சான்றிதழின் நகல் |
| வா.சா.ஆ.23 | – | வாதியின் ஆதார் அட்டை |
| வா.சா.ஆ.24 | 16.05.2019 | 4 ம் பிரதிவாதிக்கு வாதியும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி**

பி.வா.சா.1 – செல்வராணி (1 ம் பிரதிவாதி),

பி.வா.சா.2 – மலர்கொடி (3 ம் பிரதிவாதி)

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்: –**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 16.05.2019 | 4ம் பிரதிவாதிக்கு வாதியும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் |

PREMKUMAR
Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.07.30 16:31:31 +1000

சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP),
ஜெயங்கொண்டம்.